**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No.178/2004**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 22.09.2025 in accordance with the provision of Act 1 of 1873.

Name : தமிழரசி Husband Name : சுப்ரமணியன்

துவக்க நேரம்: 03.17 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

**<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>** :

1. வா.சா.ஆ.4 ஆவணத்தின் படி எனது கணவர் பிறந்த தேதி 06.02.1956 என்றால் சரிதான். எனது மாமியார் பார்வதியம்மாளின் அக்கா பெயர் சுந்தராம்பாள் என்றால் சரிதான். சுந்தராம்பாள் கணவரின் பெயர் அருணாச்சல கவுண்டர் என்றால் சரிதான், அதேபோல் பார்வதியம்மாளின் கணவர் பெயரும் சீனன் (எ) அருணாச்சல கவுண்டர் ஆகும். மேற்படி சீனன் (எ) அருணாச்சல கவுண்டர் நாகியம்பட்டி கிராமத்தின் தலைவராக இருந்தார்.

2. எனது கணவர் பதிவு பெற்ற வழக்கறிஞராக தொழில் புரிந்து வந்தார் என்றால் வழக்கறிஞராக தொழில் புரிந்தார், ஆனால் அவர் பார் கவுன்சிலில் பதிவு செய்த விவரம் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் எனது

கணவர் பார் கவுன்சிலில் வழக்கறிஞராக பதிவு செய்ததற்கான ஆவணம் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஆவணத்தின்படி எனது கணவரின் பிறந்த தேதி 15.06.1955 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், மேற்படி ஆவணத்தை பற்றி எனக்கு தெரிந்திருந்தும் தற்பொழுது வழக்கிற்காக எனக்கு தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3. எனது கணவர் வழக்கறிஞராக பணிபுரிந்தார் என்பதற்கான ஆவணம் ஏதேனும் நான் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. எனது கணவர் ஆத்தூர் அரசு மருத்துவமனையில் பிறந்ததாக சொல்லியுள்ள நிலையில் எனது கணவரின் பிறப்பு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். நான் சொல்வது தவறு என்றாலும், அதுபோன்ற பிறப்பு சான்றிதழ் இதுநாள் வரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும் பிறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை, ஆனால் எனது கணவர் ஆத்தூர் அரசு மருத்துவமனையில் பிறந்தது தொடர்பான மற்ற ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன்.

4. சீனன் (எ) அருணாச்சல கவுண்டருக்கும், 7-ஆம் பிரதிவாதி பார்வதியம்மாளுக்கும் திருமணம் நடைபெற்றதாக சொல்லும் தேதி ஐப்பசி 1952 என்றாலும், வெள்ளையூர் கிராமத்தில் நடைபெற்றது என்றாலும் சரிதான். சீனன் (எ) அருணாச்சல கவுண்டருக்கும், 6-ஆம் பிரதிவாதி மீனாட்சியம்மாளுக்கும் கடந்த 1947-ஆம் வருடம் மே மாதம் திருமணம் நடைபெற்றது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.178/2004 , Dt.22.09.2025.

5. சீனன் (எ) அருணாச்சல கவுண்டருக்கும், 6-ஆம் பிரதிவாதி கடந்த 1947-ஆம் வருடம் மே மாதம் திருமணம் நடைபெற்றுள்ள நிலையில் கடந்த 1952-ல் ஐப்பசி மாதம் மேற்படி சீனன் (எ) அருணாச்சல கவுண்டருக்கும், 7-ஆம் பிரதிவாதி பார்வதியம்மாளுக்கும் திருமணம் நடைபெற்றதாக சொல்வது சட்டப்படி தவறு என்றால் திருமணம் நடைபெற்ற விவரம் எனக்கு தெரியும், ஆனால் அது சட்டப்படி சரியா, தவறா என்ற விவரம் எனக்கு தெரியாது.

6. தாவாவில் சீனன் (எ) அருணாச்சல கவுண்டர், 7-ஆம் பிரதிவாதி பார்வதியம்மாளை ஜாதி வழக்கப்படி திருமணம் செய்து கொண்டதாக குறிப்பிட்டுள்ளதால் மேற்படி திருமணம் சட்டப்படி செல்லாது என்றாலும், சட்டப்படி செல்லாத திருமணத்தின் மூலம் பிறந்ததாக சொல்லும் எனது கணவருக்கு தாவாவில் எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

7. கடந்த 1952-ஆம் வருடம் சீனன் (எ) அருணாச்சல கவுண்டர், 7-ஆம் பிரதிவாதி பார்வதியம்மாளை திருமணம் செய்து கொண்டதாக கூறியுள்ள நிலையில் வா.சா.ஆ.3-ல் பார்வதியம்மாளின் பெயருக்கு முன்பு கருப்பழகி கவுண்டர் மகள் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர சீனன் (எ) அருணாச்சல கவுண்டரின் மனைவி என குறிப்பிடப்படவில்லை என்றால் வா.சா.ஆ.3 ஆனது கடந்த 08.10.1952-ல் ஏற்படுத்தப்பட்டது, ஆனால் அருணாச்சல கவுண்டர், 7-ஆம் பிரதிவாதி பார்வதியம்மாளுக்கும் திருமணமானது மேற்படி ஆவணத்திற்கு பின்னிட்டுதான் நடைபெற்றது.

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.178/2004 , Dt.22.09.2025.

8. எனது கணவர் உயிருடன் உள்ள வரை அவரது அம்மாவுடன் நல்ல உறவு முறையில்தான் இருந்தார் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யும் பொழுது எனது கணவரும், அவரது தாயாரும் சேர்ந்து தாக்கல் செய்யவில்லை என்றாலும், அவரது தாயாரை பிரதிவாதியாகத்தான் வழக்கில் சேர்த்துள்ளார் என்றாலும் சரிதான். எனது மாமியார் கடந்த 23.02.1986-ல் ஒரு பதிலுரை தாக்கல் செய்துள்ளார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியவில்லை.

9. வா.சா.ஆ.4-ன்படி பார்வதியம்மாளுக்கு எனது கணவர் பிறந்ததாக சொல்லும் தேதியில் அவருக்கு வயது 18 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆவணத்தின்படி அவ்வாறுதான் உள்ளது, ஆனால் அவருக்கு அப்பொழுது உண்மையான வயது என்னவென்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.4-ன்படி பார்வதியம்மாளுக்கு 18 வயது என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அவருக்கு திருமணம் நடைபெற்ற பொழுது 14 வயதுதான் நடைபெற்றுக் கொண்டிருந்திருக்கும் என்றால் என்னால் சரியாக சொல்ல இயலாது.

10. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மற்றும் ஆவணங்களின் படி சீனன் (எ) அருணாச்சல கவுண்டர், 7-ஆம் பிரதிவாதி பார்வதியம்மாளை திருமணம் செய்து கொண்டது சட்டப்படி செல்லாது என்றால் மேற்படி திருமணத்தின் சட்டப்படி செல்லும் தன்மை குறித்து எனக்கு தெரியாது. வா.சா.ஆ.5 ஆன கடந்த 20.11.1956-ல் ஏற்படுத்தப்பட்ட கிரய ஆவணத்தில் அருணாச்சல கவுண்டர் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர சீனன் (எ) அருணாச்சல கவுண்டர் என குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.178/2004 , Dt.22.09.2025.

11. வா.சா.ஆ.6 ஆவணத்தில் பார்வதியம்மாள் கணவர் பெயர் அருணாச்சல கவுண்டர் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், சீனன் (எ) அருணாச்சல கவுண்டர் என குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரிதான். மேற்படி ஆவணத்தை எனது மாமனார் அருணாச்சல கவுண்டர்தான் எனது மாமியார் பார்வதியம்மாளை அழைத்து சென்று மின்வாரியத்தில் சமர்ப்பித்தார். நான் சொல்வது தவறு என்றாலும், அவ்வாறு அருணாச்சல கவுண்டர் பார்வதியம்மாளை அழைத்துச் சென்று மின்வாரியத்தில் எவ்வித ஆவணமும் சமர்ப்பிக்கவில்லை என்றாலும், நான் தற்பொழுது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல, கடந்த 1961-ஆம் ஆண்டு வரை எனது மாமனார் சீனன் (எ) அருணாச்சல கவுண்டரும், 7-ஆம் பிரதிவாதி பார்வதியம்மாளும் சந்தோசமாகத்தான் இருந்தார்கள். கடந்த 1961- வரை எனது சீனன் (எ) அருணாச்சல கவுண்டரும், 7-ஆம் பிரதிவாதி பார்வதியம்மாளும் பிரிந்துவிட்டார்களா என்றால் இல்லை, இருவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

12. வா.சா.ஆ.6 ஆன ஒப்பந்த ஆவணம் 22.10.1977-ல் தேதியில் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, 20.09.1959-ல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வா.சா.ஆ.6-ல் எனது மாமியார் பார்வதியம்மாளின் விலாசம் கதவு எண். 13, சின்ன அக்ரஹாரம், ராசிபுரம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் 1959-ல் மின் வாரியத்தில் விண்ணப்பித்த பொழுது எனது மாமியார் நாகியம்பட்டி கிராமத்தில்தான் வசித்து வந்தார்.

13. வா.சா.ஆ.7 கடந்த 22.05.1965 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரம், சீனன்

(எ) அருணாச்சல கவுண்டருக்கும் அவரது மனைவி மீனாட்சியம்மாளுக்கும் பிறந்த மகள்களான பாக்கியம் மற்றும் இந்திராகாந்தி(2, 4 பிரதிவாதிகள்) ஆகியோர்களுக்கு எழுதி வைக்கப்பட்ட பத்திரம் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் **“1, 2 இலக்கமிட்ட நபர்கள் எனது மைனர் குமாரத்திகள் என்பதாலும், எனக்கு இதுவரை உங்களை தவிர வேறு ஆண் சந்ததிகள் ஏற்படாததாலும்"** என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அருணாச்சல கவுண்டருக்கும், 7-ஆம் பிரதிவாதி பார்வதியம்மாளுக்கும் இடையே ஏற்பட்ட கோபத்தின் காரணமாகவும், கருத்து வேறுபாடு காரணமாகவும், பார்வதியம்மாள் பெயரில் இருந்த சொத்தை அருணாச்சல கவுண்டருக்கு மாற்றிக் கொடுக்கவில்லை என்பதாலும் மேற்படி ஆவணம் எழுதப்பட்டது. மேற்படி விவரத்தை எனது வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

14. வா.சா.ஆ.8 ஆவணம் கடந்த 26.05.1965-ல் எனது மாமியார் பார்வதியம்மாள் ஹோமியோபதி பிராக்டிக்கல் வகுப்பு முடித்ததற்கான சான்றிதழ் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்திலும் பார்வதியம்மாளின் விலாசம் ராசிபுரம், சேலம் மாவட்டம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.9 சீனன் (எ) அருணாச்சல கவுண்டர் மேல் தம்மம்பட்டி காவல் நிலையத்தில் குற்ற எண்.308/65-ல் பதிய பட்ட வழக்கிற்கு ஆண்டு பட்டிகை எண். 3865/1965- என்ற வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு நகல் என்றால் சரிதான். மேற்படி வழக்கானது பார்வதியம்மாள், அருணாச்சல கவுண்டருக்கு சொத்தை கொடுக்கவில்லை என்பதாலும், அதற்கு காரணம் அவரது சகோதரி சுந்தராம்பாள்தான் என்பதால் அருணாச்சல கவுண்டர் அவரை கத்தியால் குத்தியதற்காக போடப்பட்ட வழக்கு ஆகும்.

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.178/2004 , Dt.22.09.2025.

15. வா.சா.ஆ.8 ஆன தீர்ப்பில் 3 பக்கத்தில் 4-வது பத்தியில் அருணாச்சல கவுண்டரின் சாட்சியத்தில் பார்வதியம்மாள் மனைவி இல்லையென்றும், சுப்ரமணிய கவுண்டர் மகன் இல்லை என்றும், அதேபோல் கடந்த 1952-ல் பார்வதியம்மாளை அவர் திருமணம் செய்துக் கொள்ளவில்லை என்றும் கூறியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

16. வா.சா.ஆ.13 முதல் 19 வரையிலான ஆவணங்கள் சீனன் (எ) அருணாச்சல கவுண்டரின் உத்திர கிரியை பத்திரிக்கை என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களில் சீனுப்பிள்ளை (எ) அருணாச்சல கவுண்டர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், சீனன், சீனுப்பிள்ளை என்ற இரண்டு பெயர்களுமே அருணாச்சல கவுண்டரின் பெயர்கள்தான். அவரை ஊரில் அவ்வாறுதான் அழைப்பார்கள். மேற்படி ஆவணங்கள் அனைத்தும் அருணாச்சல கவுண்டரின் உத்திர கிரியை பத்திரிக்கையை வெவ்வேறு நபர்களுக்கு அனுப்பியதாக சொல்லப்படும் ஆவணங்கள் என்றால் குடும்ப உறுப்பினர்களால் மற்ற உறவுகளுக்கு அனுப்பப்பட்ட ஆவணங்கள் ஆகும். மேற்படி ஆவணங்களில் வா.சா.ஆ.18 ஐ தவிர மற்ற அனைத்தும் ஒரே ஊரில் உள்ள நபர்களுக்கு அனுப்பப்பட்ட பத்திரிக்கை என்றால் சரிதான், வெள்ளையூரில்தான் உறவினர்கள் அதிகமாக இருந்தார்கள். மேற்படி பத்திரிக்கை வழக்கிற்காக தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல.

17. வா.சா.ஆ.25-ஆன எனது மாமியார் பார்வதியம்மாள் கடந்த 1965-ல் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் அவரது விலாசம் ராசிபுரத்தில் வசிப்பதாக

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.26 ஆவணம் செல்வலட்சுமி, பாக்கியம், உஷாராணி, இந்திராகாந்தி (1 முதல் 4 பிரதிவாதிகள்) ஆகியோர் சேர்ந்து 17.06.1999-ல் எழுதிக் கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் என்றால் சரிதான்.

18. மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் நமது தந்தை அருணாச்சல கவுண்டரும்,
தாய் மீனாட்சியம்மாளும் ஏற்கனவே காலமாகிவிட்டனர் என்றும், நமது தாய், தந்தையருக்கு ஆண் வாரிசுள் இல்லையென்றும் குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான்.
ஆனால் அருணாச்சல கவுண்டருக்கும், பார்வதியம்மாளுக்கும் ஆண் வாரிசு உள்ளார்.

19. வா.சா.ஆ.25 ஆனது எனது மாமியார் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு கடந்த 27.07.1965-ல் சீனன் (எ) அருணாச்சல கவுண்டர் பதிலறிவிப்பு வழங்கியுள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம்தான் 27.07.1965-ல் சீனர் (எ) அருணாச்சல கவுண்டர் வழங்கிய பதிலறிவிப்பு என்றால் சரிதான். மேற்படி ஆவணம் **<u>பி.வா.சா.ஆ.1</u>** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ( மேற்படி ஆவணமானது தற்பொழுது குறிப்பாணையுடன் தாக்கல் செய்யப்படுகிறது. மேற்படி ஆவணமானது குறியீடு செய்ய வாதிகள் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது).

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.178/2004 , Dt.22.09.2025.

20. 6-ஆம் பிரதிவாதி மீனாட்சியம்மாள் தாக்கல் செய்து 1 முதல் 4 பிரதிவாதிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பதிலுரையின் விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தற்பொழுது பதிலுரையில் கூறப்பட்ட விவரங்கள் சரியாக நினைவில் இல்லை. மேற்படி பதிலுரையில் கூறப்பட்டுள்ள விவரங்கள் தெரியும் என்றாலும், தற்பொழுது வழக்கிற்காக மறந்துவிட்டேன் என கூறுகிறேன் என்றால் சரியல்ல.

1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 04.51 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/- D. Jansi Rani,
Additional District Munsif, Attur

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.178/2004 , Dt.22.09.2025.